DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

In the Court of District Munsif cum Judicial Magistrate No. I, Usilampatti

Case No. 4/2023

Deposition of Witness for Prosecution : PW1

Name	:	**நதியா**	Caste	:	
Father/Husband Name	:	**பாலமுருகன்**	Calling	:	
Village	:		Religion	:	
Taluk	:		Age	:	

(all accused absent petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.02.2026

முதல் விசாரணை :

26.02.2020ம் தேதி உசிலம்பட்டி MP பழனி திருமண மஹாலில் வைத்து எனக்கும் 1வது எதிரி மணிகண்டனுக்கும் திருமணம் நடந்தது. முதல் நான்கு மாதங்கள் நன்றாக வாழ்ந்தோம். 4வது எதிரி கீர்த்திதேவிக்கு போட்ட நகைகளில் குறைவாக இருந்ததால் அவருடைய கணவர் வீட்டில் மேலும் நகைகள் கேட்டதால் என்னுடைய நகைகள் 1 வது எதிரியான எனது கணவர், 2வது எதிரியான எனது மாமனார் நாஞ்சில் முருகேசன், 3வது எதிரியான எனது மாமியார் விஜயலெட்சுமியும் கேட்டார்கள். முதலில் நான் நகையை தரமுடியாது என்று சொன்னேன். பின்னர் 66 பவுன் நகையை 1 முதல் 3 எதிரிகளிடம் கொடுத்தேன். பின்னர் நான் கர்ப்பமாக இருந்த போது ேஹாட்டல் வைக்க வேண்டும் என்று சொல்லி 15 லட்சம் வேண்டுமென்று 1வது எதிரி என்னிடம் கேட்டார். எனது குடும்பத்திடம் கேட்டு 15 லட்சம் வாங்கி 1வது எதிரியிடம் கொடுத்தேன். பின்னர் மேலும் பணம் கேட்டு அடிக்கடி 1வது எதிரி என்னை அடித்து துன்புறுத்தினார். நான் கர்ப்பமாக இருந்த போது மருத்துவமனைக்கு என்னை அழைத்து செல்லவில்லை. மேலும் நாங்கள் பணம் கொடுக்காததால் ஆன்லைனில் எனக்கு தெரிந்தவர்களிடம் என்னை பற்றி அசிங்கமாக பேசினார்

மற்றும் அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டினார். கடந்த 2022ம் ஆண்டு மூன்று மாதங்கள் தினமும் குடித்துவிட்டு வந்து என்னையும் எனது குழந்தையும் 1வது எதிரி அடித்தார். பணம் கேட்டு பிரச்சனை செய்தார். 1வது எதிரி ஆன்லைனில் கடன் வாங்கி கட்டாமல் விட்டதால் அவருடைய ஆபாச படங்கள் என்னுடைய நண்பர்கள், சகோதர, சகோதரிகள் ஆகியோருக்கு Whatsapp மூலம் பரவியது இது சம்பந்தமாக நான் கேட்ட போது 1வது எதிரி என்னை அடித்து துன்புறுத்தினார். மேற்படி கடனை அடிக்க என்னிடம் பணம் கேட்டார். நான் கொடுக்காததால் என்னை அடித்து வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

எனக்கு 60 பவுன் நகை போட்டதாக சொன்னதற்கு ஏதாவது ரசீதோ ஆவணங்களோ போலீஸ் விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை. குழந்தை பிறந்த பின்பும் என்னிடம் 15 லட்சம் பணம் வாங்கியதாக சொன்ன பின்பும்1வது எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்தேனா என்றால் வாழ்ந்தேன். மேற்படி பணம் கொடுத்ததிருக்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கினோமா என்றால் இல்லை. புகைப்படம் எதுவும் எடுத்தோமா என்றால் இல்லை. என்னிடம் வரதட்சணை கேட்டு மிரட்டியதாக சொல்லப்படும் நாளில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை, எனது பெற்றோர்களுக்கு தகவல் சொல்லி பின்னர் அவர்கள் வந்த பிறகு புகார் கொடுத்தேன். எனக்கு தமிழ் முழுமையாக தெரியாது. நான் முதலில் புகார் மனு கொடுத்தேன். எனது வழக்கறிஞர் எழுதி கொடுத்தார். தமிழ்எனக்கு படிக்க தெரியாது என்றால் சரிதான். புகார் தமிழில் உள்ளது எனது வழக்கறிஞர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சொன்னார். நான் எனது அப்பா, அம்மா ஆகியோர் புகாரில் கையெழுத்து போட்டோம். இதுசம்பந்தமாக எதிரிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பினேனா என்றால் இல்லை. 60 பவுன் நகை போட்டது போல் எனது புகைப்படத்தை காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எனது மாமியார் நர்ஸாக வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். நான் தனி குடித்தனம் செய்வதற்கு எனது கணவரை கட்டாயப்படுத்தி அழைத்தேன் என்றும் எனது கணவர் வீட்டார்கள் எனக்கு தமிழ் தெரியாது என்பதாலும் பழக்கவழக்கங்கள் தெரியாது என்பதால் பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கறிஞர் மூலம் தயாரித்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த நகையும் எனக்கு போடவில்லை என்றாலும் எதிரிகளுக்கு பணமோ , நகையோ எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரிகள் எங்களை வரதட்சணை கேட்டு கொடுமை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(சாட்சிக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. தமிழ் பேச தெரியும். கேள்விகளை தமிழில் புரிந்து கொண்டு தமிழில் பதில் அளித்தார். மேற்படி பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தை அவரது தந்தை அ.சா.2 அ.சா.1ற்கு படித்து காட்டி அ.சா.1 அதை புரிந்து கொண்டு சரியென சம்மதித்து இந்த சாட்சியத்தில் கையொப்பம் செய்தார்.)

S.d. Nathiya
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.